Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 7 / 2023

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name: | மீனா | Calling: | இல்லதரசி |
| Father's / Husband's Name: | அரவிந்த் குமார் | Religion: | |
| Village: | கொண்ணாம்பட்டி | Age: | 30 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 19.06.2025

(3, 4, 5 எதிரிகள் ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது. )

அ.சா. 4 மனுவின் பேரில் அழைத்து எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் எனது நீதிமன்ற முதன்மை சாட்சியத்தில் கூறிய விவரங்களை என் மாமனார் சொல்லிதான் கூறினேனா என்றால் சரிதான். எனது மாமனார் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் அடிக்கடி நிலம் சம்மந்தமான பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். அவ்வாறு பிரச்சனை வரும்போதெல்லாம் ஊரில் பஞ்சாயத்து மூலமாகவும், காவல் நிலையம் மூலமாகவும் சமாதானமாக செல்வது வழக்கம் என்றால் சரிதான். என் மாமனார் தரப்பில் நிலம் சம்மந்தமாக சிவில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். அந்த சிவில் வழக்கு எந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது, அந்த வழக்கு விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் சத்தம் கேட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல.

சிவில் வழக்கு எதிரிகளுக்கு சாதகமாக உள்ளதால் நாங்கள் தான் வேண்டுமென்றே எதிரிகளிடம் பிரச்சனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. என் மாமனார் குடும்பத்திற்கு சம்மந்தப்பட்ட நிலம் மேட்டுப்பகுதி என்றாலும், எதிரிகளின் நிலம் தாழ்வான பகுதி என்றாலும் சரிதான். மேட்டுப்பகுதியில் உள்ள மரத்தை வெட்டும்போது அதன் கிளைகள், இலைகள் தாழ்வான பகுதிக்கு விழ வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேட்டிலுள்ள மரத்தின் நிழலால் தாழ்வான பகுதியில் செடி வளராது என்பதால் பொதுவாக அந்த மரத்தின் கிளையை வெட்டுவார்கள் என்றால் சரிதான். என் மாமனார் என்ன வேலை செய்து பணி ஓய்வு பெற்றார் என்றால் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றார். அவர் ஆசிரியர் என்பதால் நீதிமன்ற நடவடிக்கைகள், காவல் நிலையத்தின் நடவடிக்கைகள் நன்றாக தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தின் போது ஆனந்தனுக்கு கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது மணி என்பவருக்கும் கையில் அடிப்பட்து என்றால் சரியல்ல. மணி என்பவருக்கு அடிப்பட்டது என்றாலும், நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், நாங்களும், எங்கள் தரப்பினரும் எதிரிகளை அடித்துவிட்டு மேட்டுப்பகுதியில் ஓடும்போது தவறி கீழே விழுந்ததில் தான் என் மாமனார் மற்ற இருவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் மீது எதிரிதரப்பில் இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. நான் மாமனாருக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மீனா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 7 / 2023

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name: | ராணி | Calling: | இல்லதரசி |
| Father's / Husband's Name: | ஆனந்த் | Religion: | |
| Village: | கொண்ணாம்பட்டி | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 19.06.2025

(3, 4, 5 எதிரிகள் ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது. )

அ.சா. 5 மனுவின்பேரில் அழைத்து எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் எனது நீதிமன்ற முதன்மை சாட்சியத்தில் கூறிய விவரங்களை என் கணவர் சொல்லியதின் பேரிலும், போலிசார் சொன்னதின் பேரிலும்தான் கூறினேனா என்றால் சரிதான் (என்று கூறி சாட்சி மீண்டும் நான் பார்த்ததை தான் கூறினேன் என்று கூறினார்). எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் அடிக்கடி நிலம் சம்மந்தமான பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். அவ்வாறு பிரச்சனை வரும்போதெல்லாம் ஊரில் பஞ்சாயத்து மூலமாகவும், காவல் நிலையம் மூலமாகவும் சமாதானமாக செல்வது வழக்கம் என்றால் சரிதான். என் கணவர் நிலம் சம்மந்தமாக சிவில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். அந்த சிவில் வழக்கு எந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது, அந்த வழக்கு விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சிவில் வழக்கு எதிரிகளுக்கு சாதகமாக உள்ளதால் நாங்கள் தான் வேண்டுமென்றே எதிரிகளிடம் பிரச்சனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. என் கணவர் குடும்பத்திற்கு சம்மந்தப்பட்ட நிலம் மேட்டுப்பகுதி என்றாலும், எதிரிகளின் நிலம் தாழ்வான பகுதி என்றாலும் சரிதான். பொதுவாக மேட்டுப்பகுதியில் உள்ள மரத்தை வெட்டும்போது அதன் கிளைகள், இலைகள் தாழ்வான பகுதிக்கு விழ வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேட்டிலுள்ள மரத்தின் நிழலால் தாழ்வான பகுதியில் செடி வளராது என்பதால் பொதுவாக அந்த மரத்தின் கிளையை வெட்டுவார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் என்ன வேலை செய்து பணி ஓய்வு பெற்றார் என்றால் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றார். அவர் ஆசிரியர் என்பதால் நீதிமன்ற நடவடிக்கைகள், காவல் நிலையத்தின் நடவடிக்கைகள் நன்றாக தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தின் போது மணி என்பவருக்கு கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மணி என்பவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றாலும், நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், நாங்களும், எங்கள் தரப்பினரும் எதிரிகளை அடித்துவிட்டு மேட்டுப்பகுதியில் ஓடும்போது தவறி கீழே விழுந்ததில் தான் என் கணவர், மற்ற இருவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் மீது எதிரிதரப்பில் இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் சரிதான். நான் கணவருக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராணி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K